**கல்முனை மாநகர சபை - 2021**

---

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

கல்முனை மாநகர சபையின் 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறான ஐந்தொகை, அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான வருமானங்கள் மற்றும் செலவுகள் கணக்கு, காசுப்பாய்ச்சல் கூற்று, முக்கியமான கணக்கீட்டு கொள்கைகள் மற்றும் ஏனைய விளக்கமளித்தல் தகவல்களின் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2021 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் மாநகர சபை கட்டளைச் சட்டத்தின் (252 ஆம் அத்தியாயம்) 219 ஆம் பிரிவு மற்றும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்திலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையில் உள்ளடக்கப்பட்ட ஏற்பாடுகளின் பிரகாரம் எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் தரப்படுகின்றன.

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் காட்டப்பட்டுள்ள விடயங்களின் தாக்கங்களைத் தவிர்த்து, நிதிக்கூற்றுக்கள் 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறு கல்முனை மாநகர சபையின் நிதிநிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதன் நிதிச் செயலாற்றல் மற்றும் காசுப்பாய்ச்சல் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்படும் கணக்கீட்டு நடைமுறைகளுக்கு இணங்க உண்மையாக மற்றும் நியாயமாக வெளிப்படுத்துகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் காட்டப்பட்டுள்ள விடயங்களை அடிப்படையாகக் கொண்டு எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க என்னால் கணக்காய்வு மேற்கொள்ளப்பட்டது. இக்கணக்காய்வு நியமங்களின் கீழான எனது பொறுப்பு, இந்த அறிக்கையின் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு சம்பந்தமான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் என்ற பகுதியில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்கும் வகையில் என்னால் பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வு சான்றுகள் போதியளவானவை மற்றும் பொருத்தமானவை என்பது எனது நம்பிக்கையாகும்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் சம்பந்தமாக முகாமைத்துவத்தினதும் தொடர்புபட்ட நிருவகிக்கின்ற தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

இந்நிதிக்கூற்றுக்களை பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு இணங்க தயாரித்தலும் நியாயமாகச் சமர்ப்பித்தலும் மற்றும் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களற்ற நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு இயலுமான வகையில் தேவையான உள்ளக கட்டுப்பாட்டினைத் தீர்மானிப்பது முகாமைத்துவத்தின் பொறுப்பாகும்.

மாநகர சபையின் நிதி அறிக்கையிடல் நடைமுறை சம்பந்தமான பொறுப்பு, நிருவகிக்கின்ற தரப்பினர்களால் ஏற்றுக் கொள்ளப்படும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் மாநகர சபையின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களைத்

தயாரிப்பதற்கு முடியுமான வகையில் சொந்த வருமானங்கள், செலவுகள் சொத்துக்கள், பொறுப்புக்கள் என்பன தொடர்பாக முறையான ஏடுகள் மற்றும் அறிக்கைகள் பேணப்படுதல் வேண்டும்.

## 1.4 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு சம்பந்தமாக கணக்காய்வாளரின் பொறுப்பு

---

ஒட்டுமொத்தமாக நிதிக்கூற்றுக்கள் மோசடி மற்றும் தவறுகளின் காரணமாக ஏற்படுகின்ற பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்கள் அற்றவை என்பதற்கான உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடி அல்லது தவறுகள் தனியாகவோ அல்லது கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் அதன் பொருண்மையான தன்மையானது இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் அமுல்படுத்தப்படுகின்ற பொருளாதார தீர்மானம் தொடர்பான ஏற்படுத்துகின்ற தாக்கத்தின் அடிப்படையில் தங்கியுள்ளது.

இலங்கை கணக்காய்வு நியமத்தின் பிரகாரம் கணக்காய்வின் ஒரு பகுதியாக என்னால் கணக்காய்வின் போது தொழில்சார் வெளிப்படைத்தன்மை மற்றும் தொழில்சார் ஐயப்பாடுகளுடன் நடவடிக்கை எடுக்கப்பட்டது. என்னால் மேலும்,

- வெளிப்படுத்தப்பட்ட கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்கும் போது மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களில் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களினால் ஏற்படும் ஆபத்துக்களை இனங்காண்பற்கும் மதிப்பீடு செய்வதற்குமாக சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகள் திட்டமிடப்பட்டு அமுல்படுத்தப்பட்டன. பிழையாகக் காட்டுவதன் காரணமாக ஏற்படுகின்ற பொருண்மையான பிறழ்கூற்றுக்களிலிருந்து இடம்பெறுகின்ற தாக்கங்களை விட மோசடிகளால் இடம்பெறுகின்ற தாக்கங்கள் பாரியதாக இருப்பதானது தவறான கூட்டிணைவால், போலி ஆவணங்களைத் தயாரிப்பதனால், வேண்டுமென்றே விட்டுவிடுவதனால், பிழையாகக் காட்டுவதனால் அல்லது உள்ளகக் கட்டுப்பாடுகளைத் தவிர்ப்பதனால் ஆகிய காரணங்களினால் ஏற்படுவதினாலாகும்.

- உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கமல்லாதிருந்தும் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளைத் திட்டமிடும் வகையில் உள்ளகக் கட்டுப்பாடுகள் மீதான அறிவு பெற்றுக் கொள்ளப்பட்டது.

- பயன்படுத்தப்படுகின்ற கணக்கீட்டு கொள்கைகளின் பொருத்தத் தன்மை, கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத்தன்மை, முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகளின் வெளிப்படுத்தல்கள் என்பன மதிப்பீடு செய்யப்பட்டன.

- நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களுக்கா அடிப்படையாகக் கொள்ளப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமாகவும் நியாயமாகவும் உள்ளடக்கப்பட்டுள்ளன எனவும் வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல் மதிப்பீடு செய்யப்பட்டது.

இயலுமான வகையிலும் தேவையான எந்தவொரு சந்தர்ப்பத்திலும் பின்வருனவற்றை பரீட்சிப்பதற்காக கணக்காய்வு நோக்கெல்லை விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

- தகவல்களைச் சமர்ப்பித்தல் தொடர்பாக பார்க்கும் போது மாநகர சபையின் செயற்பாடுகள் தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யப்படக்கூடிய வகையில் அதன் ஒழுங்கமைப்பு, முறைமைகள், நடைமுறைகள், பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதியளவிலும் திட்டமிடப்பட்டுள்ளதா எனவும் அதன் முறைமைகள் நடைமுறைகள், பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமாகவும் பேணிச் செல்லப்படுகின்றதா எனவும்,

- உரிய எழுத்துமூல சட்டத்திற்கோ அல்லது மாநகர சபையினால் வழங்கப்பட்ட ஏனைய பொது அல்லது விசேட ஏற்பாடுகளுக்கு இணங்க மாநகர சபை செயற்படுகின்றதா எனவும்,

- தனது அதிகாரங்கள், கடமைகள், மற்றும் பணிகளுக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதா எனவும்,

- வளங்கள் சிக்கனமாகவும், செயற்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் காலஎல்லைக்குள் மற்றும் உரிய சட்ட விதிகளுக்கு இணங்க கொள்வனவு செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டுள்ளதா எனவும் ஆகும்.

## 1.5 ஏனைய சட்டரீதியான தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தில் கீழே குறிப்பிட்ட தேவைப்பாடுகள் சம்பந்தமாக விசேட ஏற்பாடுகள் உள்ளடக்கப்பட்டன.

(அ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 6(1)(ஈ)(iii) ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்ட தேவைப்பாடுகளின் பிரகாரம் மாநகர சபையின் நிதிக்கூற்றுக்கள் முன்னைய ஆண்டுடன் இணங்கியுள்ளன.

(ஆ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 6(1)(ஈ)(iv) ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்ட தேவைப்படுகளுக்கு இணங்க முன்னைய ஆண்டின் போது என்னால் மேற்கொள்ளப்பட்ட 1.6.1 ஆம் பந்தியில் (i),(ii) சிபாரிசுகளானவை சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளன.

## 1.6 நிதிக்கூற்றுக்களை தயாரிப்பது சம்பந்தமான கணக்காய்வு அவதானிப்புக்கள்

### 1.6.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|---|
| (அ) | 2011 தொடக்கம் 2015 ஆம் ஆண்டு வரையான காலப்பகுதிகளில் காரைதீவு பிரதேச சபைக்கு செலுத்த வேண்டிய திண்மக்கழிவகற்றல் கட்டணம் ரூபா 2,046,823 தொகை நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்டிருக்கவில்லை. | எதிர்வரும் நிதியாண்டுக்கான இறுதிக் கணக்கறிக்கையில் காட்டுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | நிதிக்கூற்றுக்கள் சரியாக தயாரிக்கப்படல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஆ) | மீளாய்வாண்டில் வேலைகள் பூர்த்தியான ரூபா 8,893,624 தொகையான 08 நிர்மாணங்களின் பெறுமதிகள் மூலதனமாக்கப்பட்டிருக்கவில்லை. | எதிர்வரும் நிதியாண்டுக் கான இறுதிக் கணக்கறிக்கையில் சேர்த்துக் கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | நிதிக்கூற்றுக்கள் சரியாக தயாரிக்கப்படல் வேண்டும். |
| (இ) | மீளாய்வாண்டில் இறைச்சிக் கடையறைகள் மூலம் கிடைக்கப்பெற்ற வருமானம் ரூபா 2,249,000 தொகை நிதிக்கூற்றுக்களில் ரூபா 3,985,000 தொகையாக காட்டப்பட்டிருந்தது. | | |
| (ஈ) | கிடைக்க வேண்டிய முத்திரைக் கட்டணம் ரூபா 50,116,068 மற்றும் நீதிமன்ற தண்டப் பணம் ரூபா 4,530,551 தொகையான மீதிகள் நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்டிருக்கவில்லை. | | |
| (உ) | மீளாய்வாண்டில் பூர்த்தியாக்கப்பட்டு பிரதேச செயலகத்தினால் கையளிக்கப்பட்ட ரூபா 1,280,500 தொகையான வீதியொன்றின் பெறுமதி கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை. | | |
| (ஊ) | மீளாய்வாண்டில் அறவீடு செய்யப்பட்ட மீன் சந்தை குத்தகை வருமானம் ரூபா 6,115,000 நிதிக்கூற்றுக்களில் ரூபா 10,000 தொகையாக காட்டப்பட்டிருந்தது. | மீதிகள் மீள்பரிசீலனை செய்யப்பட்டு சீராக்கம் செய்வதற்கு நடவடி க்கை எடுக்கப்படும். | -மேற்படி- |

### 1.6.2 இணக்கம் செய்யப்படாத கட்டுப்பாட்டுக் கணக்கு

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | சிபாரிசு |
|---|---|---|
| ஏனைய அரசிறைக் கடனாளிகள் நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் மீதி மற்றும் பேரேட்டின் பிரகாரம் மீதிகளுக்கிடையே ரூபா 1,518,335 தொகையான வேறுபாடொன்று இருந்தது. | பதிவேடுகள் சீராக்கப்ப ட்டு எதிர்வரும் நிதியாண் டின் கணக்குகளில் சீராக்கப்படும். | சரியான எண்ணிக் கைகளை உள்ளட க்கி நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்பட வேண்டும். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம், 2021 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான சபையின் மீண்டுவரும் செலவுகளை மிகைத்த வருமானம் ரூபா 5,123,295 தொகையாக இருந்ததுடன், அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் மீண்டுவரும் செலவுகளை மிகைத்த வருமானம் ரூபா 4,368,372 ஆகும்.

**2.2 நிதிக் கட்டுப்பாடு**

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | சிபாரிசு |
|---|---|---|
| மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு 03 செயற்பாடற்ற வங்கி கணக்குகளுடன் தொடர்பான ரூபா 691,098 பெறுமதியான வைப்புக்களினை இனங்கண்டு அதனை மீளப்பயன்படுத்துவதற்கு நடவடி க்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | மீளப் பயன்படுத்துவத ற்கு அல்லது வருமான த்திற்கு மாற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கப்ப டும். | மீளப் பயன்படுத்துவதற்கு அல்லது வருமானத்திற்கு மாற்றுவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |

**2.3 வருமான நிருவாகம்**

**வருமானங்களை சேகரிக்கும் செயலாற்றல்**

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|---|
| (அ) | வீதவரியும் வரியும் | | |
| | ஆண்டின் ஆரம்பத்தில் நிலுவை வீதவரி ரூபா 83,127,000 ஆக இருந்ததுடன் அதில் ஆண்டின் போது அறவிடல் ரூபா 10,000,000 ஆக இருந்தமையால் ரூபா 73,127,000 தொகையான நிலுவையொன்று 01 ஆண்டு முதல் 20 ஆண்டுகள் வரையான காலவீச்சிலிருந்து காணப்பட்டு வருகின்றது. | நாட்டில் ஏற்பட்ட அசாதாரண சூழ்நிலை காரணமாகவும் ஆளணிப் பற்றாக்குறை காரணமாகவும் ஆதன வரியினை உரிய காலப்பகுதியினுள் அறவிட முடியாமலிருந்தது. | வருமானங்களை விரைவாக அறவிட வேண்டும். |
| (ஆ) | வாடகை | | |
| (i) | கல்முனை பொதுச் சந்தை கட்டிடத் தொகுதியில் அமைந்துள்ள கடையறைகளினை வாடகைக்கு வழங்கியமை தொடர்பில் 588 வாடகைதாரர்களிடமிருந்து அறவிட வேண்டிய ரூபா 11,046,198 தொகையினை 05 வருடங்களிற்கு மேலாக அறவிடுவதற்கு மாநகர சபையினால் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | நாட்டில் ஏற்பட்ட அசாதாரண சூழ்நிலை காரணமாக குறிப்பிட்ட காலப்பகுதியினுள் அறவிட முடியாமலிருந்தது. | -மேற்படி- |
| (ii) | மீளாய்வாண்டு திசெம்பர் 31 ஆந் திகதி வரை கேள்வி மீதான குத்தகை வழங்கலிருந்து பெறவேண்டிய தொகை ரூபா 27,805,368 ஆக இருந்தது. அதில் ரூபா 25,836,299 தொகை 10 ஆண்டுகளுக்கு மேற்பட்ட நிலுவையாக இருந்தது. | நாட்டில் ஏற்பட்ட அசாதாரண சூழ்நிலை காரணமாக குறிப்பிட்ட காலப் பகுதியினுள் அறவிட முடியாமலிருந்தது. | -மேற்படி- |

| | | | |
|---|---|---|---|
| (iii) | அரச பேருந்து நிலையத்திலுள்ள 02 கடையறைகளினை இலங்கை போக்குவரத்துச் சபைக்கு வாடகைக்கு வழங்கியமை தொடர்பில் அச் சபையிடமிருந்து அறவிட வேண்டிய நிலுவை ரூபா 1,070,000 தொகையினை 04 வருடங்களுக்கு மேலாக அறவிடுவதற்கு மாநகர சபையினால் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | அறவிடுவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. | -மேற்படி- |

## 3. செயற்பாட்டு மீளாய்வு

---------------------------

மாநகர சபை கட்டளைச்சட்டத்தின் 4 ஆம் பிரிவு என்பவற்றின் கீழ் பொது சுகாதாரம், பொதுப் பாவனைச் சேவைகள், பொது வீதி தொடர்பான விடயங்கள் முறைமைப்படுத்துதல் மற்றும் நிருவகித்தல், பொது மக்களின் நல்வாழ்வு, வசதிகளும் நலன்புரியும் ஆகியன சபையினால் நிறைவேற்றப்பட வேண்டியிருந்த செயற்பாடுகளை நிறைவேற்றுவது தொடர்பாக அவதானிக்கப்பட்ட விடயங்கள் கீழே தரப்படுகின்றன.

### 3.1 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்

---------------------------------------------

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|---|
| (அ) | சபையின் அதிகார எல்லைக்குள் விற்பனை செய்யப்பட்ட 91 அசைவற்ற ஆதனங்களின் விற்பனை பெறுமதி யான ரூபா 67,180,000 தொகை யிலிருந்து ஒரு சதவீத தீர்வையான ரூபா 671,800 தொகையினை அறவிடுவதற்கு மாநகர சபை கட்டளைச் சட்டத்தின் (252 ஆம் அத்தியாயம்) 247(உ) பிரிவின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக் கவில்லை. இதனால் சபைக்கு வருமானமொன்று இழக்கப் பட்டிருந்தது. | எதிர்காலத்தில் அறவிடுவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படும். | மாநகர சபை கட்டளைச் சட்டத்தின் பிரகாரம், அசைவற்ற ஆதனங்களின் விற்பனை பெறுமதி மீது ஒரு சதவீத தீர்வையினை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஆ) | மீளாய்வாண்டில் தேசிய நீர் வழங்கல் வடிகாலமைப்புச் சபையினால் நீரிணைப்பினை வழங்குவதற்காக மாநகர சபையின் எல்லைக்குட்பட்ட பகுதிகளில் 315 பயனாளிகளிடமிருந்து வெட்டப்பட்ட வீதிகளினை புனரமைப் பதற்காக ரூபா 825,500 தொகை அறவிடப்பட்டிருந்தும் இதில் 165 வீதிகள் கணக்காய்வுத் திகதி வரைக்கும் மாநகர சபையினால் புனரமைக்கப்பட்டிருக்கவில்லை. | வெட்டப்பட்ட வீதிகளினை புனரமைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | வெட்டப்பட்ட வீதிகளினை புனரமைப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (இ) | சபைக்குச் சொந்தமானதும் மற்றும் சபையினால் பயன்படுத்தப்பட்டு வரும் 99 காணிகள் மற்றும் வாகனங்களின் பெறுமதிகள் மதிப்பிடப்பட்டு கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை. | மதிப்பீடு செய்வதற்கு நடவடிக்கை மேற்கொள் ளப்படும். | நிதிக்கூற்றுக்கள் சரியாக தயாரிக்கப் படல் வேண்டும். |

### 3.2 செயற்பாட்டு செயற்திறனின்மைகள்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|---|
| (அ) | மாநகர சபையின் அதிகாரப் பிரிவிற்குட்பட்ட 07 கிராமங்க ளிலுள்ள 3,421 ஆதன அலகுக ளிற்கு ஆதனவரியினை அறவிடுவத ற்கான ''K'' படிவம் அவ் ஆதன அலகுகளின் உரிமையாளர்களுக்கு விநியோகிப்பதற்கு கணக்காய்வுத் திகதி வரைக்கும் மாநகர சபையினால் நடவடிக்கை எடுக்கப்ப ட்டிருக்கவில்லை.<br>அத்துடன் 23 வட்டாரப் பிரிவிலுள்ள கைமாற்றப்பட்ட 3,495 ஆதன உரிமையாளர்களின் பெயர்களினை ஆதனவரி பெயர்ப் பதிவேட்டில் உட்படுத்துவதற்கு செயற்திறன்மிக்க முறையான வேலைத்திட்ட மொன்றினை நெறிப்படுத்துவதற்கு மாநகர சபையினால் நடவடிக்கை எடுக்கப்படாமையினால் கைமாற்றப் பட்ட ஆதன உரிமையாளர்களி டமிருந்து அவ் ஆதனங்களுக்கான ஆதனவரியினை அறவிடுவதில் பாரிய சிக்கல் நிலை ஏற்பட்டுள்ளதுடன் அவற்றை குறிப்பி ட்ட காலத்தினுள் அறவிடுவதிலும் காலதாமதம் ஏற்பட்டுள்ளன. | நாட்டில் ஏற்பட்ட அசாதாரண சூழ்நிலை காரணமா கவும் ஆள ணிப் பற்றாக்குறை காரணமாகவும் மேற்படி நடவடிக்கை கள் தாமதப்படுத்தப்ப ட்டன. | ''K'' படிவம் வழங்குவ தற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். கைமாற்றப்பட்ட ஆதன உரிமையாள ர்களின் பெயர்க ளினை ஆதனவரி பெயர்ப் பதிவேட்டில் உட்படுத்து வதற்கு செயற்திறன்மிக்க முறையான வேலை த்திட்ட மொன்றினை நெறிப்படுத்துவ தற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஆ) | கல்முனை பொதுச் சந்தை கடைய றைகளினை வாடகைக்கு வழங்கி யமை தொடர்பில் மாநகர சபையினால் மேற்கொள்ளப்பட்ட ஒப்பந்த நிபந்தனையின் பிரிவு 9 இன் பிரகாரம் ஒரு மாத காலத்திற்கு மேல் தொடர்ச்சியாக கடையறைகள் பயன்படுத்தாமல் மூடப்பட்ட நிலையில் காணப்படுமாயின் அதற்குரிய காரணத்தை மாநகர சபையின் முதல்வர் அல்லது ஆணையாளர் அல்லது அதிகாரம் அளிக்கப்பட்ட உத்தியோகத்தருக்கு அறிவித்து அனுமதி பெற்றுக் கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படாமல் சந்தையின் மேல்தளத்திலுள்ள 55 கடையறைகள் தொடர்ச்சியாக மூடப்பட்ட நிலையில் காணப்பட்டிருந்தன. | எதிர்காலத்தில் நடவடிக்கை மேற்கொள்ளப்படும். | ஒப்பந்த நிபந்தனை களின் பிரகாரம், நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

### 3.3 சொத்துக்கள் முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|
| கல்முனை பொதுச் சந்தை கட்டிடத் தொகுதியிலுள்ள 15 கடையறைகள் மற்றும் பின்புறமாக தற்காலிகமாக அமைக்கப்பட்ட 153 கடையறைகளினை 10 வருடங்க ளுக்கு மேலாக திருத்தம் செய்து வாடகைக்கு வழங்குவதற்கு மாநகர சபையினால் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | திருத்தம் செய்து வாடகை க்கு வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | திருத்தம் செய்து வாடகைக்கு வழங்கு வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |